**குச்சவெளி பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குச்சவெளி பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெருகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | உள்ளூராட்சி சபைகளிற்கான விசேட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் (LDSP) மேற்கொள்ளப்பட்ட 05 மூலதன வேலைகளிற்காக செலுத்த வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 18,228,490 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்த தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற உருப்படிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 507,330 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| இ) | மீளாய்வாண்டில் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட இடர்கடன் ரூபா 199,700 தொகை கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட இடர்கடன் குறித்த உத்தியோகத்தர் கணக்கிலிருந்து கழித்துக் காட்டப்படல் வேண்டும். |
| ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 57 வகையான நுகர்வுப் பொருட்களின் கூட்டுமொத்தம் ரூபா 196,576 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நுகர்வுப் பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| உ) | மீளாய்வாண்டில் சபையினால் வழங்கப்பட்டிருந்த சோலைவரிக் கழிவீடான ரூபா 563,007 தொகை நிதிக்கூற்றுக்களில் தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சோலைவரிக் கழிவீடான நிதிக்கூற்றுக்களில் தனியாகக் காட்டப்படல் வேண்டும். |
| ஊ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதி களிற்காக செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 146,222 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்படல் வேண்டும். |
| எ) | மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,241,510 தொகை கிழக்கு மாகாண சபையிடமிருந்து பெறவேண்டிய நிர்வாக மீளளிப்புத் தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பெறவேண்டிய நிர்வாக மீளளிப்புத் தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) பிரிவு 126 (vii) (ஊ) | சபையின் அதிகார எல்லையில் காணப்படும் விளம்பரப் பலகைகளுக்கு விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளம்பரக்கட்டணம் அறவிடப்படுகிறது. | விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) பிரிவு 134 | அதிகார எல்லையில் அமைந்துள்ள புதிய வருமான மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அதிகார எல்லையில் அமைந்துள்ள புதிய வருமான மூலங்களை இனங்காணப்படல் வேண்டும். |
| (iii) பிரிவு 149 | அங்கீகரிக்கப் பட்ட 09 உல்லாச விடுதிகளிடமிருந்து உரிமைத் தீர்வைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | உபவிதிகளின் ஊடாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆனையத்தின் அனுமதி பெற்ற உல்லாச விடுதிகளிடமிருந்து உரிமைத் தீர்வைகளை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iv) பிரிவு 166 | ஆதனவரியினை செலுத்தாத ஆதன உரிமையாளர் களுக்கெதிராக எழுத்திலான அறிவித்தலொன்றினை விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவிடப்படுகிறது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) 1946 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க விலைமதிப்பு கட்டளைச்சட்டத்தின் பிரிவு 20 | சபையின் எல்லைப் பிரதேசத்திலுள்ள அசையாத ஆதனங்களை 05 வருடங்களிற்கு ஒரு | -மேற்படி- | அசையாத ஆதனங்களை 05 வருடங்களிற்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு சபையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தடவை மதிப்பீடு செய்வதற்கு சபையில் நடவடிக்கை எடுக்கப்படாமல் வரி அறவிடப்படவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட்டு வரி அறவிடப்படவேண்டும். |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள்<br>விதி193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப் படடிருக்கவில்லை. | எதிர்க்காலத்தில் சீர்செய்து சமர்ப்பிக்கப்படும். | முரண்பாட்டு விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>(i) நிதிப்பிரமாணம் 571 | காலம் கடந்த ரூபா 32,138,086 பெறுமதியான வைப்புக்கள் தீர்பணவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022.12.30 திகதிய சபைக்கூட்டத்திற்கு அமைவாக தீர்மான இல-57/28ம், 2021.6.30 திகதிய சபைக்கூட்டத்திற்கு அமைவாக தீர்மான இல-39/31ம், சார்பாக வைப்புக்கள் வருமானமாகமாற்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 371(2) | ரூபா 314,710 பெறுமதியான செலுத்தப்பட்ட மூன்று முற்பணங்கள் 08 மாதங்களிற்கு மேலாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் ஊடாக குழு ஒன்று அமைத்து சீர்செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (உ) | 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்கம் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வரவினை உறுதிப்படுத்தாமல் சபையின் 14 உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை நாள் கொடுப்பனவும் 10 உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் | சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | சுற்றறிக்கை பின்பற்றப்படல்வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்கம் அரச நிர்வாக சுற்றறிக்கை | 05 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தியடைந்த இடமாற்றம் வழங்கப்படாது 73 உத்தியோகத்தர்களினை 07 தொடக்கம் 27 வருடங்கள் கடந்திருந்தும் அவர்களினை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகி ன்றது | சுற்றறிக்கைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவீனங்களை மிகைத்த வருமானம் ரூபா 34,206,395 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனங்களை மிகைத்த வருமானம் ரூபா 50,869,884 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா ''000'' | ரூபா ''000'' | ரூபா ''000'' | ரூபா ''000'' | ரூபா ''000'' | ரூபா ''000'' | ரூபா ''000'' | ரூபா ''000'' |
| (i) | வீதவரியும் வரியும் | 22,224 | 32,791 | 9,866 | 22,925 | 16,000 | 14,980 | 7,347 | 17,506 |
| (ii) | வாடகை | 8,382 | 16,571 | 2,656 | 13,915 | 7,937 | 8,824 | 6,715 | 9,472 |
| (iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 5,975 | 1,987 | 1,987 | -- | 1,624 | 1,188 | 1,188 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 1,943 | 3,058 | 4,304 | (1,246) | 763 | 242 | 400 | 1,115 |
| | | **38,524** | **54,407** | **18,813** | **35,594** | **26,324** | **25,234** | **15,650** | **28,093** |

**2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வீதவரி ரூபா 17,506,000 ஆகவும் இருந்ததுடன் ஆண்டின் போது அறவிடல் ரூபா 2,682,447 ஆக காணப்பட்டது. | உயிர்த்த ஞாயிறு சாகரான் குண்டு வெடிப்பு, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண பொருளாதார நெருக்கடி, விலை அதிகரிப்பு, எரிபொருள் அதிகரிப்பு, என்ற காரணங்களால் நிலுவைகள் காணப்படுகின்றுத எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | நிலுவைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கல் மீதான பெற வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 12,261,000 ஆக இருந்தது. அதில் ரூபா 12,179,493 தொகை 10 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டது. | சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | நிலுவையினை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| இ) | 2022 ஆம் ஆண்டு சனவரி 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் முச்சக்கர வண்டி தரிப்பிடமாக பிரகடனப்படுத்தப்பட்ட தரிப்பிடங்களிலிருந்து மீளாய்வாண்டிற்கு அறவிடவேண்டிய ரூபா 60,000 பதிவுக் கட்டணத்தை அறவிடுவதற்கும் சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| ஈ) | முத்திரைக் கட்டணம்<br>மாகாண சபையின் செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா 13,367,466 முத்திரைக் கட்டணத்தினை குறிப்பிட்ட காலத்தில் சபையினால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அத்தொகை முழுவதும் மாகாண நிதியத்தின் வருமான கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | முடிந்த அளவு முத்திரை தீர்வை அனைத்தும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பான தகவல் தெரியவில்லை. | உரிய காலப்பகுதிக்குரிய வருமானங்களை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய (EPF) சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த காலப்பகுதிக்கு மற்றும் மீளாய்வாண்டிக்குரிய பங்கு பணம் உரிய காலத்தில் செலுத்தப்படாமையினால் தண்டப்பணமாக ரூபா 2,005,306 | உரியவர்களிடம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை சபையினால் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தன. | | |
| ஆ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் (LDSP) கீழ் புல்மோட்டை பொது நூலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 996,000 பெறுமதியான 16 இலத்திரனியல் பொருட்களினை பயன் படுத்தப்படவில்லை. | 16 இலத்திரனியல் பொருட்ப்பாவனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |
| இ) | மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டில் மின்சாரசபைக்கு செலுத்தி தீர்க்க வேண்டிய ரூபா 7,892,527 தொகையான வீதிவிளக்குகளிற்கான மின்சாரக் கட்டணத் தொகையினை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது சபை வருமான பற்றாக்குறை காரணமாக எதிர்க்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வீதிவிளக்குகளிற்கான மின்சாரக் கட்டணம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ஈ) | சேதனை பசசை உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் உள்ளூராட்சி அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,000,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 03 இயந்திரங்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| உ) | பிரதேசத்தில் சேகரிக்கப்படும் 5,720 தொன் திண்மக்கழிவுகளினை தரம்பிரிக்காமல் குச்சவெளி பிரதேசத்தில் ஒழுங்கீனமற்ற முறையில் கொட்டப்பட்டிருந்தன. | தரம் பிரித்து சேகரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. | தரம் பிரித்து சேகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ஊ) | மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட 187 எண்ணிக்கையான பொருட்களின் கிரயப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அல்லாச் சொத்துக்களிலிருந்து கழித்துக்காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கிரயப் பெறுமதி சொத்துக்களிலிருந்து கழித்துக்காட்டப்பட்டல் வேண்டும். |
| எ) | சபையினால் பயன் படுத்தப்படும் ஆதனங்களை அடையாளம் கண்டு அவற்றின் உரிமையினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனங்கள் அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆதனங்கள் அடையாளம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | 2012 ஆண்டு நெல்சிப் நிதியம் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 24,444,588 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 35 கடைகளைக் கொண்ட பொதுச்சந்தைக் கட்டடத்தொகுதி ஆரம்பத்திலிருந்து பயன்படுத்துவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | LDSP மூலமாக எதிர்க்காலத்தில் அரிசி ஆலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ) | சபையினால் பயன்படுத்தப்படும் 13 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு 35 வருடங்களுக்கு | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாகன உரிமை மாற்றப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | | |
| இ) | சபைக்குச் சொந்தமான 22 வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது நிதி கருத்திற் கொண்டு எதிர்க்காலத்தில் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாரு சபையில் 22 ஊழியர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்த அதே வேளை 02 ஊழியர்கள் மேலதிகமாகக் காணப்பட்டிருந்தது. | ஒருவர் தற்காலிக இடமாற்றம் சென்றுள்ளார், வெளிநாடு செல்ல விண்ணப்பித்துள்ளனர். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2022 திசெம்பர் 15 ஆந் திகதியும் PT/18/2022 ஆம் இலக்கமும் கொண்ட மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கமைய நிதிக்கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 ஆகஸ்ட் 03 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறு தவறு ஏற்படாது உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 40 நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்க்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | கணக்காய்வு விடயம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும். | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் உரிய முறையில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |